# ஷாபிஈ மத்ஹபில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் உள்ள சட்டப்பிரச்சினைகளில் வலுவான கருத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் சொற்கள்: முன்னைய இலக்கியங்களின் மீளாய்வு

# Terminologies Used to Indicate the Strong Opinion among more than One Opinion in Legal Issues in Shafi'i Madhhab: A Review of the Literature

M.M.A. Abdullah[1], S.H. Aathif Ahamad[2] & M.M. Shiyana[3]

[1,2&3]Deparment of Islamic Studies, South Eastern University of Sri Lanka
abdullahmma416@gmail.com

## ஆய்வுச் சுருக்கம் (Abstract)

இஸ்லாமிய சட்டத்துறை சார்ந்த மத்ஹபுகள் அத்துறையின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புக்களைச் செய்துள்ளன. இவற்றுள் பிரதான நான்கு மத்ஹபுகளுள் ஷாபிஈ மத்ஹபும் ஒன்றாகும். இஸ்லாமிய சட்டத்துறை சார்ந்து தோன்றும் பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஷரீஆவின் மூலாதாரங்களின் துணைகொண்டு பெறும்போது பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் இம்மத்ஹப் அறிஞர்களுக்கு மத்தியில் ஏற்பட்டன. அந்தவகையில் ஷாபிஈ மத்ஹபில் சட்டப் பிரச்சினைகளில் கருத்து வேற்றுமை நிலவும்போது அவற்றில் வலுவான கருத்துக்களை குறிக்கப் பயன்படுத்தப்படும் கலைச்சொற்களை வரையறை செய்யும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. முன்னைய இலக்கியங்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில் குறித்த மத்ஹப் சார்ந்த அறிஞர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் காணப்படும் சட்டப்பிச்சினைகளில் வலுவான கருத்தைக் குறிக்க பல நியமங்களைக் கருத்தில் கொண்டு பல்வேறு சொற்களைப் பயன்படுத்தியுள்ளமை கண்டறியப்பட்டதோடு அவற்றின் பிரயோகங்களுக்கிடையில் காணப்படும் துல்லியமான வேறுபாடுகளும் வரையறை செய்யப்பட்டன. இஸ்லாமிய சட்டத்துறையில் ஷாபிஈ மத்ஹபை அடிப்படையாகக் கொண்ட சட்டப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளின் போது அம்மத்ஹபின் கருத்துக்களைப் புரிந்து கொள்வதற்கும் மத்ஹபுகளுக்கிடையிலான ஒப்பீடுகளுக்கும் இவ்வாய்வு உறுதுணையாக அமையவல்லது.

**திறவுச் சொற்கள் (Keywords):** மத்ஹப், ஷாபிஈ மத்ஹப், இஸ்லாமிய சட்டத்துறை, பிக்ஹ்

## Abstract

The schools of Islamic Jurisprudence have made a significant contribution to the development of the field. Among them, Shafi'i madhhab is one of the major four schools. Several opinions were found in the madhhab scholars when they sought to find solutions based on sources of sharia to various problems that arise related to Islamic jurisprudence. Thus, the study was aimed at defining the terminologies used to denote strong and acceptable opinions in the case of various opinions in legal issues related to Islamic jurisprudence in the madhhab. In this study, which was conducted based on the earlier literature, it was found that the scholars of the

madhhab have used various terms to point out the strong point of view by considering several factors, and the precise differences found between their applications were also defined. This study would be more useful for future studies on understanding the views of the Shafi'i Madhhab in resolving legal issues based on the Madhhab in Islamic jurisprudence and conducting comparisons between the schools of Islamic jurisprudence.

**Keywords:** Madhhab, Shafi'i Madhhab, Islamic Jurisprudence, Fiqh.

## ஆய்வு அறிமுகம் (Introduction)

இஸ்லாத்தின் தனித்துவங்களில் அதன் சட்டப்பகுதி மிக முக்கியமான ஒன்றாகும். மனித வாழ்வில் காலம், இடம், சூழ்நிலைகள் என பலவற்றையும் கவனத்தில் கொண்டு சட்டப்பிரச்சினைகளுக்கான (المسائل) பொருத்தமான தீர்வுகளை அது முன்வைக்கிறது (Habeebullah, Mazahir & Nairoos, 2016). இஸ்லாமிய ஷரீஆ அருளப்பட்டு பல நூற்றாண்டுகள் கடந்த பின்னரும் இக்காலத்திலும் அதன் தூய்மையும் பொறுத்தப்பாடும் சற்றும் குறைவடையாமல் மனித வாழ்வில் நடைபெறும் அனைத்து செயற்பாடுகளுக்குமான தீர்வை அது வழங்குகிறது (Nadwi, 2007). இவ்வாறு இஸ்லாமிய சட்டப்பகுதி ஒரு தனியான துறையாக வளர்ச்சி பெற்று அதற்கென பல விதிகளும் சட்டதிட்டங்களும் அடிப்படைகளும் வகுக்கப்பட்டதில் இஸ்லாமிய சட்டப்பகுதியில் தோன்றிய மத்ஹப்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும் (Idarat al-Ifta, 2015). இஸ்லாமிய வரலாற்றில் கி.பி 9 மற்றும் 10ஆம் நூற்றாண்டுகளில் ஆரம்பமான இம்மத்ஹப்களில் மிகப் பிரபலமானவையாகவும் இன்றளவிலும் செல்வாக்குக் கொண்டவையாகவும் 04 மத்ஹபுகள் காணப்படுகின்றன (Hussin, 2014). இமாம் அபூ ஹனீபா (ரஹ்), மாலிக் (ரஹ்), ஷாபிஈ (ரஹ்), அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்) ஆகிய நான்கு மிகப் பெரும் சட்ட மேதைகளை மையப்படுத்தித் தோற்றம் பெற்றுள்ள அம்மத்ஹபுகளில் (Rabb, 2009) இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களின் மத்ஹப் மிக முக்கியமான ஒன்றாகும்.

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் ஒரு சட்ட மேதையாக மட்டுமன்றி சட்டமியற்றலுக்கான அடிப்படைகளை வகுக்கும் அறிஞராகவும் (الأصولي), குர்ஆனியக் கலைகள் (علوم القرآن), ஹதீஸ், அரபு மொழி (علم اللغة) போன்ற பல்வேறு துறைகளில் ஆழ்ந்த அறிவும் அனுபவமும் கொண்டவர்களாகவும் காணப்பட்டார்கள் (Al-Qawasimi, 2003; Al-Zameeli,, Abu Aun, 2012). இவ்வாறான பல்துறைத் தேர்ச்சியானது அவருக்கென தனியான ஒரு சட்டத்துறை சார்ந்த மத்ஹப் தோன்றுவதற்குப் பிரதான காரணமாக அமைந்தது. அத்தோடு இவரது சட்டத்துறை சார்ந்த தீர்ப்புகள் (الفتاوى) ஒன்று சேர்க்கப்பட்டது மட்டுமல்லாது அவரது அணுகுமுறையைத் தழுவி சட்டப்பிரச்சினைகளுக்கான தீர்வை வழங்கும் அறிஞர்களும் காலத்துக்குக் காலம் உருவாகத் தொடங்கினர (Al-Qawasimi, 2003'). இவர்களே ஷாபிஈ மத்ஹப் அறிஞர்கள் என அறியப்படுகின்றனர்.

எனினும், சில நேரங்களில் இம்மத்ஹபில் குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் (مسألة) ஒன்றுக்கு மேற்பட்ட தீர்ப்புகள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களுமுண்டு. இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களே எகிப்துக்குச் (مصر) சென்று தனக்கு புதிய ஹதீஸ்கள் கிடைக்கப்பெற்றதனாலும் அங்குள்ள சூழல் அவர் ஏற்கனவே வாழ்ந்த ஈராக் சூழலை விட சற்று வித்தியாசமாகக் காணப்பட்டதனாலும் தனது பழைய சட்டத்தீர்புக்கள் சிலவற்றை திரும்பப்பெற்றுக் கொண்டார்கள் (Al-Kaf, 1997). அது மட்டுமல்லாது இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களுக்குப் பின் புதிதாகத் தோன்றிய சட்டப்பிரச்சினைகளுக்கு அம்மத்ஹபைச் சார்ந்த அறிஞர்கள் அல்குர்ஆன் மற்றும் ஸுன்னாவிலிருந்து இவரின் அணுகுமுறைகளையும் சட்ட விதிகளையும் பயன்படுத்தித் தீர்ப்பு வழங்க முற்பட்ட போது அவர்களின் தீர்ப்புக்களில் வித்தியாசங்கள் ஏற்பட்டு ஓரே சட்டப் பிரச்சினையில் ஒன்றுக்கு மேற்பட்ட தீர்ப்புகள் வழங்கப்பட்டன Al-Mutawah & Abu-Mounes, 2018). எனவே, இவ்வாறான சந்தர்ப்பங்களில் குறித்த சட்டப் பிரச்சினை தொடர்பில் கருத்து வேற்றுமை நிலவும்போது அதனைக் குறித்துக்காட்டுதல் மற்றும் வலுவான கருத்து (சட்டத் தீர்ப்பு) எது, வலுவற்ற கருத்து எது போன்றவற்றைக் குறிப்பிட பல்வேறு முக்கியமான கலைச்சொற்களை இம்மத்ஹப் அறிஞர்கள் பயன்படுத்தியுள்ளனர் (Al-Zafiri, 2002). ஷாபிஈ மத்ஹபில் குறித்த சட்டப்பிரச்சினை தெடர்பில் நிலவும் கருத்து வேற்றுமையை அறிந்து கொள்வதற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்படாத ஆதாரங்களடிப்படையில் வலுவான, வலுவற்ற கருத்துக்களை பெற்றுக் கொள்வதற்கும் இக்கலைச் சொற்கள் பற்றிய தெளிவு மிக முக்கியமானதாகும். ஷாபிஈ மத்ஹப் அறிஞர்களின் இப்பணியானது இம்மத்ஹபின் ஒழுங்கையும் சீரிய அமைப்பையும் தெளிவுபடுத்துவதோடு சட்டப் பிரச்சினைகள் தொடர்பில் கருத்து வேற்றுமை நிலவும் போது அவற்றை எவ்வாறு கையாள வேண்டும் என்பது தொடர்பிலும் மிக அழகிய வழிகாட்டல்களை வழங்குகின்றது.

### ஆய்வுப் பிரச்சினை (Research Problem)

இஸ்லாமிய சட்டத்துறையில் (الفقه الإسلامي) குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் காணப்படுவது இயல்பானதாகும். எனினும் அவற்றில் ஆதாரங்கள் அடிப்படையில் மிகப்பொருத்தமான கருத்தை தேர்ந்தெடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே இஸ்லாமிய சட்ட அறிஞர்களின் கருத்தாகும். ஆகவே, இஸ்லாமிய சட்டத்துறை சார்ந்த மத்ஹப் என்ற வகையில் ஷாபிஈ மத்ஹபிலும் சில சட்டப்பிரச்சினைகளில் ஒன்றுக்கு மேற்பட்ட தீர்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் பல கருத்துக்கள் காணப்படும் போது பல்வேறு நியமங்களை அடிப்படையாகக் கொண்டு வலுவான கருத்தைக் குறிக்க இம்மத்ஹப் அறிஞர்கள் தனியான சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதே எமது ஆய்வுப் பிரச்சினையாகும்.

### ஆய்வு நோக்கம் (Research Objective)

1. ஷாபிஈ மத்ஹபில் கருத்து வேற்றுமை நிலவும் சட்டப் பிரச்சினைகளில் வலுவான கருத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொற்களை இனங்காணல்.

2. குறித்த கலைச்சொற்களை வரையறை செய்து அவற்றுக்கிடையில் காணப்படும் வேறுபாடுகளை அடையாளப்படுத்தல்.

**ஆய்வு முறையியல் (Research Methodology)**

இது ஒரு விபரண ஆய்வாகும். முன்னைய இலக்கியங்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுக்காக இரண்டாம் நிலைத்தரவுகளாக தலைப்புடன் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள் மற்றும் இணையத்தள தகவல்கள் என்பன பயன்படுத்தப்பட்டன. பெறப்பட்ட தகவல்கள் தொகுத்தறிதல் முறையில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**ஆய்வு முக்கியத்துவம் (Significant of the Study)**

ஷாபிஈ மத்ஹபில் கருத்து வேற்றுமை நிலவும் சட்டப் பிரச்சினைகளை அடையாளப்படுத்தவும் அவற்றில் வலுவானவற்றைக் குறிக்கவும் இம்மத்ஹபின் அறிஞர்கள் பயன்படுத்திய சொற்களின் அர்த்தங்களை புரிந்து கொள்வதற்கு துணைபுரியும் என்ற வகையில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகிறது.

**இலக்கிய மீளாய்வு (Literature Review)**

ஆய்வுத் தலைப்பு தொடர்பில் வெளியிடப்பட்ட கடந்தகால ஆக்கங்களை ஆய்வுக்கு உட்படுத்திய போது ஷாபிஈ மத்ஹபின் தோற்றம், வளர்ச்சி, முதிர்ச்சி, சட்டங்களை நிறுவும்போது கவனத்தில் கொள்ளப்படும் மூலாதங்கள் மற்றும் அம்மத்ஹபில் பயன்படுத்தப்படும் கலைச் சொற்கள் தொடர்பான ஆக்கங்கள் காணப்படுவதை அறிய முடிந்தது.

مصطلحات المذهب الشافعي எனும் தலைப்பில் கலாநிதி கமால் சாதிக் யாசீன் லக் என்பவரால் வெளியிடப்பட்ட நூலில் ஷாபிஈ மத்ஹபின் பயன்படுத்தப்படும் கலைச் சொற்கள் தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது. கலைச் சொற்கள் தொடர்பான கோட்பாட்டை வரையறை செய்து அதன் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ள இந்நூல் பெரிதும் துணை புரிந்தது.

معجم في مصطلحات فقه الشافعية எனும் தலைப்பில் ஸக்காப் பின் அலி அல்காப் என்பவரால் வெளியிடப்பட்ட நூலானது ஷாபிஈ மத்ஹபில் சட்டத்துறையில் பயன்படுத்தப்படும் அனைத்துக் கலைச் சொற்கள் மற்றும் அவற்றுக்கான விளக்கங்களை உள்ளடக்கி அகராதி அமைப்பில் தொகுக்கப்பட்டிருந்தது. அரபி எழுத்துக்களின் அகரவரிசைப்படி குறித்த கலைச் சொற்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன.

مصطلحات المذاهب الفقهية وأسرار الفقه المرموز في الأعلام والكتب والآراء والترجيحات எனும் தலைப்பில் மர்யம் முஹம்மத் ஸாலிஹ் அழ்ழபீரீ என்பவரால் வெளியிடப்பட்ட நூலில் இஸ்லாமிய சட்டத்துறையின் மிகப் பிரதானமான நான்கு மத்ஹபுகளில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் கலைச் சொற்கள் மற்றும் அவற்றில் குறித்த மத்ஹபுகளின் அறிஞர்களால் பயன்படுத்தப்படும் தனியான கலைச் சொற்கள், குறித்த மத்ஹபுகளின் நூற்களில் பயன்படுத்தப்படும் தனியான

கலைச் சொற்கள் மற்றும் குறித்த சட்டப்பிரச்சினைகளில் வலுவான கருத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் கலைச் சொற்கள் என்பன தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டிருந்தன.

الشافية في بيان اصطلاحات الفقهاء الشافعية எனும் தலைப்பில் ஸாலிஹ் பின் அஹ்மத் அல்ஈத்ரூஸ் என்பவரால் எழுதப்பட்ட நூலில் ஷாபிஈ மத்ஹப் அறிஞர்களின் பிரபலமான புனைப்பெயர்கள், அவ்வறிஞர்களால் பயன்படுத்தப்படும் சொற்றொடர்கள், ஷாபிஈ மத்ஹபின் பிரபலமான நூல்களின் சிறப்புப் பெயர்கள், பிந்திய ஷாபிஈ மத்ஹப் அறிஞர்களின் சட்டத்தீர்ப்புக்காக பயன்படுத்தும் சொற்றொடர்களின் விபரம், ஒரே கிளைப்பிரச்சினையில் இமாம் நவவி அவர்களின் மாறுபட்ட சொற்றொடர்கள் பற்றிய விபரம், ஒரே கிளைப்பிரச்சினையில் இமாம் இப்னு ஹஜர் அல்ஹய்தமி அவர்களின் மாறுபட்ட சொற்றொடர்கள் பற்றிய விபரம், இமாம் நவவி அவர்களின் "மின்ஹாஜ்" எனும் நூலில் கையாளப்பட்டுள்ள கலைச்சொற்களின் விபரம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்தன.

மேற்கூறப்பட்ட ஆய்வுகள் இவ்வாய்வை மேற்கொள்ள பெரிதும் துணை புரிந்தாலும் ஷாபிஈ மத்ஹபில் கருத்து வேற்றுமை நிலவும் சட்டப்பிரச்சினைகளில் வலுவான கருத்தைக் குறிக்க அனைத்து அறிஞர்களாலும் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்களைக் கண்டறிந்து அவற்றின் அர்த்தங்களை வரையறை செய்கிறது என்ற வகையில் இவ்வாய்வு முன்னனைய இலக்கியங்களில் இருந்து வேறுபட்டமைகிறது.

## அடைவுகளும் கலந்துரையாடலும் (Findings and Discussion)

ஷாபிஈ மத்ஹபில் குறித்த ஒரு சட்டப் பிரச்சினையில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் காணப்படும்போது அவற்றில் வலுவான கருத்துக்களை அடையாளப்படுத்தவென ஷாபிஈ மத்ஹப் அறிஞர்கள் பல சொற்பிரயோகங்களைப் கையாண்டுள்ளனர். இவ்வாறான சொற்பிரயோகங்கள் மற்றும் அவற்றுக்கான வரைவிலக்கணங்கள் பின்வருமாறு:

### 1. வலுவான கருத்துக்களைக் குறிக்கப்பயன்படுத்தப்படும் சொற்கள்

#### 1.1. அல்அழ்ஹர் (மிகவும் வெளிப்படையானது - الأظهر)

குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் இம்மத்ஹபின் நிறுவனரான இமாம் ஷாபிஈ அவர்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கருத்துக்களைக் குறிப்பிட்டு அக்கருத்துக்களுக்கான ஆதாரங்கள் பலமானதாகவும் காணப்படின் அக்கருத்துக்களில் வலுவான கருத்தைக் குறிக்கும் விதமாக ''அல்அழ்ஹர்'' எனும் பிரயோகம் இம்மத்ஹப் அறிஞர்களால் பயன்படுத்தப்படும். அத்தோடு குறித்த சட்டப்பிரச்சினையில் ஆதாரங்களடிப்படையில் பலமாக இருப்பினும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வலுவான கருத்தை (அல்அழ்ஹரை) விட பலம் குறைவாகக் காணப்படும் ஏனைய கருத்துக்களுக்கு ''அழ்ழாஹிர்'' எனும் பதம் பயன்படுத்தப்படும் (Tamir, 1999).

இப்பதம் எவ்விடத்தில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பில் ஷாபிஈ மத்ஹபின் அறிஞர்கள் வித்தியாசமான போக்கைக் கொண்டுள்ளனர். இம்மத்ஹப் அறிஞர்களுள் முக்கியமான ஒருவரான இமாம் நவவி அவர்கள் குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் இமாம்

ஷாபிஈ அவர்களின் தீர்ப்புக்களில் கருத்து வேற்றுமை மற்றும் வலுவான கருத்தைத் குறிக்க இப்பதத்தைப் பயன்படுத்துவார் (Al-Nawawi, 1996). அதேபோல் இம்மத்ஹபைச் சார்ந்த மற்றுமொரு அறிஞரான இமாம் பய்ழாவி அவர்கள் குறித்த ஒரு சட்டப் பிரச்சினையில் ஷாபிஈ மத்ஹப் அறிஞர்களுக்கிடையில் கருத்து வேற்றுமை காணப்படும்போது அவற்றில் வலுவான கருத்தைத் குறிக்க இப்பதத்தைப் பயன்படுத்துவார் (Al-baydawi, 2008). அத்தோடு மற்றுமொரு ஷாபிஈ மத்ஹப் அறிஞரான இமாம் கஸ்ஸாலி அவர்கள் குறித்த ஒரு சட்டப் பிரச்சினையில் இமாம் ஷாபிஈ அவர்களிடம் அல்லது அவரது மத்ஹப் அறிஞர்களிடம் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் காணப்படும்போது குறித்த சட்டப்பிரச்சினையில் வலுவான கருத்தைக் குறிக்க இப்பதத்தைப் பயன்படுத்துவார் (Al-Ghazzali, 1996).

அதேபோல் மற்றுமொரு அறிஞரான இமாம் ராபிஈ அவர்கள் குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் இமாம் ஷாபிஈ அவர்களின் அல்லது அவரது மத்ஹப் அறிஞர்களின் இரு கருத்துக்களில் வலுவான கருத்தைக் குறிக்க அல்லது குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் எத்தனை கருத்துக்கள் உள்ளன என்பது தொடர்பில் மத்ஹப் அறிஞர்களிடம் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் காணப்படும் போது அவற்றில் வலுவான கருத்தைக் குறிக்க இப்பதத்தைப் பயன்படுத்துவார் (Al-Zubaidi, 1994). அதேபோல் இமாம் இப்னு ஹஜர் அவர்கள் இப்பதத்தை ''ஊன்றுதல் கொள்ளத்தக்கது (அல்மு.ஃ.தமத்) எனும் கருத்துக்கு இப்பதத்தைப் பயன்படுத்துவார் (Al-Hadari, 1960). அதாவது குறித்த ஒரு சட்டப் பிரச்சினையில் இமாம் ஷாபிஈ அவர்களின் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களில் ஆதாரங்கள் அடிப்படையில் ஊன்றுதல் கொள்ளத்தக்க கருத்தைக் குறிக்க இப்பதம் பயன்படுத்தப்படும்.

**1.2. அழ்ழாஹிர் (வெளிப்படையானது - الظاهر)**

இது மேலே குறிப்பிடப்பட்ட அல்அழ்ஹர் எனும் சொல்லுக்கு ஓரளவு ஒப்பானதாகும். குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் இம்மத்ஹபில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கருத்துக்கள் குறிப்பிடப்பட்டு அக்கருத்துக்களுக்கான ஆதாரங்கள் பலமானதாகவும் காணப்படின் அக்கருத்துக்களில் வலுவான கருத்தைக் குறிக்கும் விதமாக இப்பதம் பயன்படுத்தப்படும். எனினும் இதன் வலு மேலே குறிப்பிடப்பட்ட அல்அழ்ஹர் எனும் பதத்தின் ஊடாகக் குறிப்பிடப்படும் கருத்தின் வலுவை விட சற்றுக் குறைவானதாகும் எனவும் இதற்கு மாற்றமான கருத்து ஆதாரங்களடிப்படையில் பலமற்றது எனவும் இமாம் கஸ்ஸாலி அவர்கள் குறிப்பிடுகிறார்கள் (Al-Ghazzali, 1996).

அதாவது குறித்த சட்டப்பிரச்சினையில் இமாம் ஷாபிஈ அவர்களின் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களில் ஆதாரங்களடிப்படையில் பலமாக இருப்பினும் ஆதாரங்களடிப்படையில் மிக பலமாகக் காணப்படுவதனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வலுவான கருத்தை (அல்அழ்ஹரை) விட பலம் குறைவாகக் காணப்படும் ஏனைய கருத்துக்களுக்கு ''அழ்ழாஹிர்'' எனும் பதம் பயன்படுத்தப்படும்.

அதேபோல் ஒரு சட்டப்பிரச்சினையில் இமாம் ஷாபிஈ தவிர்ந்த ஏனைய அறிஞர்கள் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் அக்கருத்துக்களில் வலுவான

கருத்தைக் குறிக்கும் விதமாகவே இப்பதம் பயன்படுத்தப்படும் என இமாம் பய்ழாவி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் (Al-baydawi, 2008).

**1.3. அல்அஷ்ஹர் (மிகவும் பிரபலமானது - الأشهر)**

குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் இமாம் ஷாபிஈ அவர்களின் அல்லது அம்மத்ஹப் அறிஞர்களின் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் காணப்பட்டு அவற்றில் ஒரு கருத்து ஏனைய கருத்தை அல்லது கருத்துக்களை விடப் பிரபலமானதாகக் காணப்படின் அப்பிரபலமான கருத்தைக் குறிக்க இப்பதம் பயன்படுத்தப்படும். அக்கருத்தின் பிரபலம் அக்கருத்தை பதிவு செய்தவரின் பிரபலம் அல்லது அது யாரிடத்திலிருந்து பதிவு செய்யப்பட்டதோ அவரின் அந்தஸ்து அல்லது குறித்த ஒருவரிடமிருந்தே இக்கருத்து பதிவு செய்யப்பட்டுள்ளது என மத்ஹபின் அனைத்து அறிஞர்களும் ஏகோபித்தல் போன்றவற்றைக் கொண்டு தீர்மானிக்கப்படும் (Al-Ahdal, n.d.).

**1.4. அல்மஷ்ஹூர் (பிரபலமானது - المشهور)**

குறித்த ஒரு சட்டப் பிரச்சினையில் இமாம் ஷாபிஈ அவர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் இருந்து அவற்றுக்கிடையில் கருத்து வேற்றுமை பலவீனமாகக் காணப்படின் குறித்த சட்டப் பிரச்சினையில் வலுவான ஏற்றுக்கொள்ளத்தக்க கருத்தைக் குறிக்க இப்பதம் பயன்படுத்தப்படும். அத்தோடு பலவீனமான ஆதாரத்தைக் கொண்டமைந்த வலுவற்ற ஏனைய கருத்துக்களைக் குறிக்க ‘‘அல்கரீப்’’ எனும் பதம் பயன்படுத்தப்படும் (Al-Haitami, 1938).

எனவே, மேலே குறிப்பிடப்பட்ட அல்அழ்ஹர் மற்றும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அல்மஷ்ஹூர் ஆகிய இரு பதங்களும் ஏறக்குறைய சமமான நிலைமைகளின் போதே பயன்படுத்தப்படுகின்றன. எனினும் குறிப்பிட்ட சட்டப் பிரச்சினையில் குறிப்பிடப்படும் ஒன்றுக்கு மேற்பட்ட தீர்ப்புகளுக்கான ஆதாரங்கள் பலமாகக் காணப்படுவதனால் கருத்து வேற்றுமையும் பலமாகக் காணப்படின் அவற்றில் வலுவான ஏற்புடைய தீர்ப்பைக் குறிக்க ‘‘அல்அழ்ஹர்’’ எனும் பதமும் குறிப்பிட்ட தீர்ப்புக்களில் ஒரு தீர்ப்பின் ஆதாரங்கள் மாத்திரம் பலமாகக் காணப்பட்டு ஏனைய தீர்ப்புக்களின் ஆதாரங்கள் பலவீனமாகக் காணப்படுவதனால் கருத்து வேற்றுமை பலவீனமாகக் காணப்படின் அவற்றில் வலுவான தீர்ப்பைக் குறிக்க ‘‘அல்மஷ்ஹூர்’’ எனும் பதமும் இம்மத்ஹப் அறிஞர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

**1.5. அல்அஸஹ்ஹு (மிகச் சரியானது - الأصح)**

குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் இமாம் ஷாபிஈ தவிர்ந்து ஏனைய மத்ஹப் அறிஞர்களுக்கிடையில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் காணப்பட்டு குறித்த கருத்துக்களின் ஆதாரங்கள் பலமாகக் காணப்படுவதனூடாக அக்கருத்துவேற்றுமை பலமாகக் காணப்படின் அக்கருத்துக்களில் வலுவான கருத்தைக் குறிக்கும் விதமாக இப்பதம் பயன்படுத்தப்படும். அத்தோடு குறித்த சட்டப்பிரச்சினையில் ஆதாரங்களடிப்படையில் பலமாக இருப்பினும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வலுவான கருத்தை விட பலம் குறைவாகக் காணப்படும் ஏனைய கருத்துக்களுக்கு ‘‘அஸ்ஸஹீஹ்’’ எனும் பதம் பயன்படுத்தப்படும் (Al-Shirbini, 1997).

அதேபோல் இமாம் கஸ்ஸாலி (மரணம் ஹி. 505.) மற்றும் அவருக்கு முற்பட்ட ஷாபிஈ மத்ஹப் அறிஞர்கள் தமது நூற்களில் இமாம் ஷாபிஈ மற்றும் அம்மத்ஹப் சார்ந்த ஏனைய அறிஞர்களின் கருத்துக்களில் ஆதாரங்களடிப்படையில் வலுவான கருத்தைக் குறிக்க ''அல்அஸஹ்ஹு'' மற்றும் ''அஸ்ஸஹீஹ்'' ஆகிய இரு பதங்களையும் பயன்படுத்தியுள்ளனர் (Al-baydawi, 2008).

### 1.6 அஸ்ஸஹீஹ் மற்றும் அஸ்ஸவாப் (சரியானது - الصحيح والصواب)

இது குறிப்பிட்ட ஒரு சட்டப் பிரச்சினையில் இமாம் ஷாபிஈ தவிர்ந்து ஏனைய மத்ஹப் அறிஞர்களிடம் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் காணப்பட்டு அவற்றில் ஒரு கருத்துக்கான ஆதாரம் பலமாகவும் ஏனைய கருத்துக்களுக்கான ஆதாரங்கள் பலவீனமாகவும் இருப்பின் ஆதாரங்கள் அடிப்படையில் வலுவான கருத்தைக் குறிக்க ''அஸ்ஸஹீஹ்'' எனவும் ஏனைய கருத்துக்களுக்கான ஆதாரங்கள் மிகவும் பலவீனமாக இருப்பின் ஆதாரங்கள் அடிப்படையில் வலுவான கருத்தைக் குறிக்க ''அஸ்ஸவாப்'' எனவும் பயன்படுத்தப்படும் (Al-Mahalli, 2010).

### 1.7. அல்மத்ஹப் (மத்ஹபில் வலுவானது - المذهب)

குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் ஷாபிஈ மத்ஹபில் எத்தனை கருத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்பது தொடர்பில் மத்ஹப் அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் காணப்படும்போது அவற்றில் மத்ஹபின் கருத்தாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தைக் குறிக்கவே ''அல்மத்ஹப்'' எனும் பதம் பயன்படுத்தப்படும் (Al-Haitami, 1938).

### 1.8. அல்அர்ஜஹ் (மிக ஏற்றுக் கொள்ளத்தக்கது - الأرجح)

குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் இமாம் ஷாபிஈ அவர்களின் அல்லது ஏனைய மத்ஹப் அறிஞர்களின் ஒரு கருத்து வெளிப்படையாக ஆதாரங்களடிப்படையில் ஏனைய கருத்துக்களை விட பலமானதாகக் காணப்படின் அக்கருத்தைக் குறிக்க ''அல்அர்ஜஹ்'' எனும் பதம் பயன்படுத்தப்படும். அத்தோடு வெளிப்படையில் இக்கருத்தை விட பலம் குறைந்ததாக இருப்பினும் வேறு வலுவூட்டல் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு வலுவானதாகக் கொள்ளப்படும் கருத்து ''அர்ராஜிஹ்'' (ஏற்றுக் கொள்ளத்தக்கது) என அழைக்கப்படும் (Al-baydawi, 2008).

### 1.9. அல்அக்வா (மிகவும் பலமானது - الأقوى)

குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் காணப்படின் அவற்றில் கருத்து ரீதியாக வலுவான சட்டத்தீர்ப்பைக் குறிக்க "அல்அக்வா" எனும் பதம் பயன்படுத்தப்படும் (Al-Rafi'I, 1997).

### 1.10. அல்அஷ்பஹ் (மிகவும் ஒப்பானது - الأشبه)

குறித்த ஒரு சட்டப்பிரச்சினைக்கான தீர்வு கியாஸை அடிப்படையாகக் கொண்டு பெறப்படும் போது இரண்டு அடிப்படைகளுடன் ஒப்பிட்டு அப்பிரச்சினைக்கான தீர்ப்பு பெறப்பட முடியுமாக இருப்பினும் அவ்வடிப்படைகளில் ஒன்றின் காரணிக்கு மிகவும் ஒப்பானதாக

அச்சட்டப்பிரச்சினை காணப்படுமாயின் அதனைக் குறிக்க “அல்அஷ்பஹ்” எனும் பதம் பயன்படுத்தப்படும் (Al-Ghazzali, 1996).

### 1.11. அல்அக்ரப் (மிகவும் நெருக்கமானது - الأقرب)

குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் ஷாபிஈ மத்ஹப் அறிஞர்களுக்கு மத்தியில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் காணப்படுமாயின் அக்கருத்துக்களில் ஒப்பீட்டின் அடிப்படையில் இமாம் ஷாபிஈ அவர்களின் கருத்துக்கு மிகவும் நெருக்கமான கருத்தைக் குறிக்க “அல்அக்ரப்” எனும் பதம் பயன்படுத்தப்படும் (Al-baydawi, 2008).

### 1.12. அல்அக்யஸ் (ஒப்பீட்டின் அடிப்படையில் மிகவும் ஏற்புடையது - الأقيس)

கியாஸை அடிப்படைடயாகக் கொண்டு தீர்ப்பு பெறப்பட்ட குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் அதன் அடிப்படை மற்றும் அவ்வடிப்படைக்கும் இப்பிரச்சினைக்கும் இடையிலான காரணி அல்லது அவ்விரண்டில் ஒன்று பலமானதாகக் காணப்படின் அதனைக் குறிக்க “அல்அக்யஸ்” எனும் பதம் பயன்படுத்தப்படும். அத்தோடு குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் இமாம் ஷாபிஈ அவர்களின் இரு கூற்றுக்கள் அல்லது ஷாபிஈ மத்ஹப் அறிஞர்களின் இரு கருத்துக்கள் கியாஸின் அடிப்படையில் பெறப்பட்டிருப்பின் அவ்விரு கருத்துக்களில் மிகவும் வெளிப்படையானதை அல்லது மிகச் சரியானதைக் குறிக்கவும் இப்பதம் பயன்படுத்தப்படுவதுண்டு (Al-Zubaidi, 1994).

### 1.13. அல்அஹ்வத் (மிகவும் பேணுதலானது - الأحوط)

குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் இமாம் ஷாபிஈ அவர்களின் இரு தீர்ப்புக்களில் அல்லது மத்ஹப் அறிஞர்களின் வலுவான இரு கருத்துக்களில் ஒன்று ஷரீஆவின் பொதுவான ஆதாரமொன்றின் கருத்தை மறைமுகமாக வலுப்படுத்துவதாக அமையப்பெறும்போது அதனைக் குறிக்க “அல்அஹ்வத்” எனும் பதம் பயன்டுத்தப்படும் (Al-Rafi’i, 2013).

### 1.14. அல்முக்தார் (தேர்ந்தெடுக்கப்பட்டது - المختار)

குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் ஷாபிஈ மத்ஹப் அறிஞர்களில் சிலர் ஒரு கருத்தையும் பலர் அதற்கு மாற்றமான ஒரு கருத்தையும் குறிப்பிட்டு அவ்விரு கருத்துக்களில் சிலரால் குறிப்பிடப்பட்ட கருத்தே ஆதாரங்கள் அடிப்படையில் வலுவானதாகக் காணப்படுவதாக இமாம் நவவீ அவர்கள் காணுமிடத்து அதனைக் குறிக்க “அல்முக்தார்” எனும் பதம் அவரால் பயன்படுத்தப்படும். எனவே, இது ஷாபிஈ மத்ஹப் அறிஞரான இமாம் நவவி அவர்கள் மாத்திரம் பயன்டுத்தும் ஒரு பதமாகும் (Al-Nawawi, 1992).

### 1.15. வஅலய்ஹி அல்அமலு மற்றும் வல்அமலு அலா கிலாபிஹி (அதன்படியே நடைமுறை அமையப்பெறும் மற்றும் அதற்கு முரணாகவே நடைமுறை அமையப்பெறும் - وعليه العمل والعمل على خلافه)

குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் ஷாபிஈ மத்ஹபில் ஆதாரங்கள் அடிப்படையில் பிரபலமான கருத்துக்கு மாற்றமாக மத்ஹபின் நடைமுறை அமையப்பெறும் எனில் அதனைக் குறிக்க

"வஅலய்ஹி அல்அமலு" அல்லது "அல்அமலு அலா கிலாபிஹி" எனும் சொற்றொடர்கள் பயன்படுத்தப்படும் (Al-Kaf, 1997).

### 1.16. இத்தபகூ, வஹாதா மஜ்ஸூமுன் பி(b)ஹி மற்றும் வஹாதா லா கிலாப பீஹி (அவர்கள் ஒருமித்தனர், இது உறுதியானதாகும் மற்றும் இவ்விடயத்தில் எவ்வித கருத்துவேற்றுமையும் இல்லை - اتفقوا وهذا مجزوم به وهذا لا خلاف فيه)

குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் ஷாபிஈ மத்ஹப் அறிஞர்கள் அனைவரிடமும் ஒருமித்த கருத்தொன்று காணப்படுமிடத்து அதனைக் குறிக்க "இத்தபகூ, வஹாதா மஜ்ஸூமுன் பிஹி மற்றும் வஹாதா லா கிலாப பீஹி" எனும் பதங்கள் பயன்படுத்தப்படும். எனவே, இப்பதங்கள் குறித்த மத்ஹப் அறிஞர்களின் ஏகோபித்த கருத்தை மாத்திரமே குறிப்பனவாகும் (Al-Kaf, 1997).

### 1.17. ஹாதா முஜ்மஉன் அலய்ஹி (இது ஏகோபித்த முடிவாகும் - هذا مجمع عليه)

குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் ஷாபிஈ மத்ஹப் அறிஞர்களும் ஏனைய அனைத்து மத்ஹபுகளின் அறிஞர்களும் ஏகோபித்து ஒரு முடிவைப் பெறுவார்களாயின் அதனைக் குறிக்க "ஹாதா முஜ்மஊன் அலய்ஹி" எனும் பதம் பயன்படுத்தப்படும் (Al-Shirbini, 1997).

### 1.18. லாகின் (எனினும் - لكن)

குறித்த ஒரு சட்டப்பிரச்சினையில் "லாகின்" எனும் சொல் பயன்படுத்தப்படுமெனில் அச்சொல்லுக்குப் பின்னர் குறிப்பிடப்படும் தீர்ப்பே இம்மத்ஹபில் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும். எனினும் அவ்வசனத்தில் "லாகின்" எனும் பதத்துக்கு முன்னர் "கமா" (என்பதைப் போன்று - كما) எனும் பதத்தைக் கொண்டு வரையறை செய்யப்பட்டிருப்பின் "லாகின்" எனும் பதத்துக்கு முன்னர் குறிப்பிடப்பட்ட விடயமே இம்மத்ஹபில் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும் என்பதே இம்மத்ஹப் அறிஞர்களில் பெரும்பாலானோரின் கருத்தாகும். குறித்த ஒரு சட்டப்பிரச்சினையின் போது ஏற்றுக் கொள்ளத்தக்க கருத்து தெளிவாக குறிப்பிடப்படாமல் இருக்கும்போதே இவ்விதிகள் கவனத்தில் கொள்ளப்படும். அதாவது குறிப்பிட்ட சட்டப்பிரச்சினை தொடர்பில் ஏற்றுக்கொள்ளத்தக்க வலுவான கருத்து தெளிவாக குறிப்பிடப்பட்டிருப்பின் "லாகின்" எனும் பதம் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விதிகள் ஏற்புடையனவாக கருதப்படமாட்டாது என்பதோடு தெளிவாக குறிப்பிடப்பட்ட சட்டத் தீர்ப்பே இம்மத்ஹபில் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகக் கொள்ளப்படும் (Al-Shirbini, 1997).

### 1.19. அல்அக்வம் (மிக நேர்த்தியானது - الأقوم)

குறித்த ஒரு சட்டப்பிரச்சினைக்கான தீர்ப்பில் எவ்வித கருத்து வேற்றுமையும் முரண்பாடான கருத்தும் இடம்பெறாமல் இருக்குமாயின் அதனைக் குறிக்க "அல்அக்வம்" எனும் பதம் பயன்படுத்தப்படும் (Al-baydawi, 2008).

**முடிவுரை (Conclusion)**

இஸ்லாமிய சட்டத்துறையின் நிலைதன்மையில் இஸ்லாமிய சட்டத்துறைசார்ந்த மத்ஹபுகளின் பங்களிப்புகள் மிக முக்கியமானவையாகும். குறித்த மத்ஹபுகளின் வளர்ச்சிக்கு அம்மத்ஹபுகளைச் சார்ந்த அறிஞர்கள் பல்வேறு சேவைகளை ஆற்றியுள்ளனர். இம்மத்ஹபுகளுள் மிக முக்கியமான ஒரு மத்ஹபான ஷாபிஈ மத்ஹபின் அறிஞர்களும் புதிதாகத் தோன்றும் சட்டப்பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இவற்றின் விளைவாக குறித்த ஒரு சட்டப்பிரச்சினைக்கான தீர்வைத் பெற முயலும்போது பல்வேறு கருத்துக்கள் தோன்றியமையால் அவற்றில் வலுவான கருத்துக்களைக் குறிக்க பல நியமங்களை கவனத்தில் கொண்டு பல்வேறு சொற்பிரயோகங்களை அவர்கள் கையாண்டுள்ளனர். அனைத்து கால சூழ்நிலைகளுக்கும் பொருந்தும் வகையில் அமையப்பெற்றுள்ள இஸ்லாமிய சட்டத்துறையின் வளர்ச்சியில் சட்டத்துறைசார் அறிஞர்களின் ஈடுபாட்டை தெளிவுபடுத்துவதற்கான சிறந்த எடுத்துக்காட்டாக இம்முயற்சிகள் அமையப்பெற்றுள்ளன.

**உசாத்துணைகள் (References)**

*Al-Ahdal, Ahmed. Miqri. (n.d.). Sulam al-Mutaealim al-Muhtaj ilaa Marifat Rumuz al-Minhaj. Author.*

*Al-baydawi, Abdullah bin Omar. (2008). Al-ghayat al-Quswaa fi Dirayat al-Fatwaa. Beirut, Lebanon: Dar al-Bashayir al-Islamia.*

*Al-Eydrus, Salih. A. (1996). Al-Shshafiat fi Bayani Istilahat al-Fuqaha' al-Shshafieia. Malang, Indonesia: Al-Hujuwn.*

*Al-Ghazzali. Muhamad. (1996). Al-Wasit fi al-Madhab. Beirut, Lebanon: Dar Ihya al-Turath al-Arabi.*

*Al-Hadari, Al-Alawi. ahmad bin Abi Bakr. (1960). Al-Ibtihaj fi bayan Istilah alminahaj. Cairo: Lajnat al-Bayan al-Arabi.*

*Al-Haitami. Ibn Hajar. (1938). Tuhfat al-Muhtaj bi sharh al-Minahaj. Cairo: Al-Maktabat al-Tijariat al-Kubra.*

*Al-Hefnawi, Muhammad. Ibrahim. (2005). Al-Fath al-Mubin fi Halli Rumuz wa Mustalahat al-Fuqaha' wa al-'Usuliiyn. Author.*

*Al-Kaf, Sakkaf. A. (1997). Mu'jam fi Mustalahat Fiqh al-Shshafieia. Author.*

*Al-Mahalli, Jalal al-Din. (2010). Sharah al-Mahalli ala al-Minhaj. Beirut: Dar al-Kotob al-Ilmiyah.*

*Al-Malibari, Abd al-Qadir. M. (2017). Tahqiq al-Matlab bi Taerif Mustalah al-Mudhhab (imdhahab al'imam alshshafiei)*. Beirut, Lebanon: Dar al-Kotub al-Ilmiyah.

Al-Mutawah, A.N.A. & Abu-Mounes, R.N. (2018). The attitudes of the Shafi'i scholars on identifying (Ashab Al-Wujoh) An Analytical Fundamental Study. *Al-Meezan for Law and Islamic Studies*, 252, 1-38. Available at https://www.researchgate.net/

Al-Nawawi, Abu Zakariya. (1992). *Al-Tahkik*. Beirut: Dar al-Jil.

Al-Nawawi, Abu Zakariya. (1996). *Minhaj al-Talibin*. Beirut: Dar al-Kotob al-Ilmiyah.

Al-Qawasimi, A.Y. (2003). Al-Madkhal ila Madhab al-Imam al-Shafi. Amman, Jordan: Dar Al-Nafa'es

Al-Rafi'i, Al- Qazvini. (1997). *Fath al-Aziz Sharah al-Wajiz*. Beirut: Dar al-Kotob al-Ilmiyah.

Al-Rafi'i, Al- Qazvini. (٢٠١٣). *Al-Muharar fi Fiqh al-Imam al-Shafi*. Cairo: Dar al-Salam.

Al-Saqaf. Alawi Bin Ahmed. (2017). Al-Fawayid al-Makiat fima Yahtajuh Talbat al-Sharaiya. Kuwait: Dar Al Diaa.

Al-Shirbini, Al-Khatib. Muhamad bin Muhamad. (1997). *Mughni al-Muhtaj ilaa Marifat Ma'ani Alfaz al-Minhaj*. Beirut: Dar al-Ma'rifa.

Al-Zafiri, Maryam. M.S. (2002). *Mustalahat al-Madhahib alfaqhiat wa'Asrar al-Faqih al-Marmuz fi al-'aAelam wa al-Kutub wa al-Ara' wa al-Tarjihat*. Beirut, Lebanon: Dar Ibn Hazm.

Al-Zameeli, Z.I. & Abu Aun, N.M. (2012). Juhud al-Imam al-Shafi fi al-Tafsir wa Ulum alQuran. Paper presented at Fourth International Scientific Conference of Faculty of Arts and Humanities at Al Aqsa University on *Imam Shafi'i*, Gaza, Palastin. https://www.alaqsa.edu.ps/site_resources/aqsa_magazine/files/844.pdf

Al-Zubaidi, Muhammad Bin Muhammad. (1994). *Ithhaf al-Ssadat al-Mutaqin bi Sharh Iihya' Ulum al-Deen*. Beirut: Dar al-Kotob al-Ilmiyah.

Al-Zuhayli, Wahbah. (١٩٨٩). Al-Fiqh al-Islami wa-Adillatuh. Damascus: Dar al-Fikr.

Habeebullah, M.T., Mazahir, S.M.M., & Nairoos, M.H.M. (2016). Muslimkaḷ Siṟupāṉmaiyāka Vāḻum Nādukaḷil Fik'h Rītiyāṉa Karuttu Muraṇpāṭukaḷai Kaiyāḷum Muṟaikaḷ- Ilaṅkaiyai Maiyappaṭuttiya Oru Aiyvu [Methods of Dealing with Jurisprudential Jifferences in Muslim-Minority Countries- A Study Based on Sri Lanka. Paper Presented at 3rd International Symposium of Faculty of Islamic Studies and Arabic Language on *the Role of Islamic and Arabic studies in the National*

*Development*, South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka. http://ir.lib.seu.ac.lk/handle/123456789/2651

Hussin, Iza (2014). "Sunni Schools of Jurisprudence". In Emad El-Din Shahin (ed.). *The Oxford Encyclopedia of Islam and Politics*. Oxford University Press. doi:10.1093/acref:oiso/9780199739356.001.0001

Idarat al-Ifta. (2015). Al-Madhahib al-Fqhyat al-Arba'a a'imathuha- Atwarha- Usuluha- Atharuha. Authour. Available at https://d1.islamhouse.com/data/ar/ih_books/single_01/ar_Almazaheb_alfeqheyh.p

*Mustalahat al-Madhhab al-Shafiei*. (n.d.). Alhamdlilah. Retrieved from https://www.alhamdlilah.com/

*Mustalahat al-Shafieia*. (2007). Midad. Retrieved from http://midad.com/article/

Nadwi, A. (1). Originality and modernity in Islamic Jurisprudence. *IIUC Studies*, 4, 97-120. https://doi.org/10.3329/iiucs.v4i0.2864

Rabb, Intisar A. (2009). "Fiqh". In John L. Esposito (ed.). *The Oxford Encyclopedia of the Islamic World*. Oxford: Oxford University Press. doi:10.1093/acref/9780195305135.001.0001

Tamir, Muhamad. M. (1999). *Mustalahat al-Madhhab inda al-Shafieia*. Cairo, Egypt: Maktabat al-Balad al-Amin.

Yasin-Lak, Kamal. Sadiq. (2010). *Mustalahat al-Madhhab al-Shafiei*. Erbil, Iraq: Tafseer Book Store.